பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

மே.எ.எண்.48180/கே2/2019 நாள்.03.11.2023

அரசாணை (டி) எண்.327, வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை நாள்.26.10.2023 சார்பு செய்யப்படுகிறது.

திரு.அ.ஞானபிரகாஷ், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள நாகப்பட்டினம் மாவட்டப் பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் S.S.L.C மதிப்பெண் சான்று அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப நாகப்பட்டினம் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணையின்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்:
திரு.அ.ஞானபிரகாஷ், இளநிலை உதவியாளர்.
(நாகப்பட்டினம் மாவட்டப் பதிவாளர் மூலம்)

நகல்:
1.மாவட்டப் பதிவாளர், நாகப்பட்டினம். (S.S.L.C அசல் மதிப்பெண் சான்றுடன் பதிவு எண்.1637223/மார்ச் 2016).
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

கலைஞர் 100
1924 - 2023

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திரு.அ.ஞானபிரகாஷ் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நிமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (டி) எண்.327**

**நாள் :26.10.2023**

**சோபகிருது, ஐப்பசி -9,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (டி) எண்.30, வணிகவரி மற்றும் பதிவுத்(கே) துறை, நாள் 09.02.2021.
3. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.48180/ கே2/2019, நாள் 06.12.2021.
4. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.48180/கே2/2019, நாள் 18.04.2022.
5. அரசாணை (டி) எண்.255, வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை, நாள் 23.08.2023.

-----------

**ஆணை:**

பதிவுத்துறையில், பட்டுக்கோட்டை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிகையில் 12.11.2014 அன்று பணியிடை மரணமடைந்த திரு.அ.கா.அடைக்கலம் என்பவரின் மனைவி திருமதி.அ.தமிழ்ச்செல்வி தனது மகன் திரு.அ.ஞானபிரகாஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 12.05.2017 நாளிட்ட மனுவும் மற்றும்

திரு.அ.ஞானபிரகாஷ் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 08.10.2020 நாளிட்ட மனுவும் அளித்திருந்தனர்.

2. மேலே இரண்டு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணைகளில், 2016-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 58-ல் உள்ள அதிகாரத்தின்படி திரு.அ.ஞானபிரகாஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுவதற்கு ஏதுவாக அவர் பொருட்டு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளிக்கப்படும் சமயத்தில் குறைந்தபட்ச வயதான 18 வயதினை பூர்த்தி செய்திருக்க வேண்டும்" என்ற நிபந்தனை மற்றும் 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 20(6)(b)-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசுப் பணியாளர் இறந்து மூன்று ஆண்டிற்குள் 18 வயது நிரம்பிய வாரிசுதாரரால் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை ஆகியவற்றை தளர்த்தி ஆணையிடப்பட்டன.

3. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், திரு.அ.ஞானபிரகாஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.அ.ஞானபிரகாஷ் 17.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.அ.ஞானபிரகாஷ் இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

4. பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது திட்டம் குறித்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கவனமுடன் ஆய்வு செய்து தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், நாகப்பட்டினம் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.அ.ஞானபிரகாஷ் என்பவரை 17.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர்

பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி

அரசு செயலாளர்

**பெறுநர்:**

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.

திரு.அ.ஞானபிரகாஷ் இளநிலை உதவியாளர்,

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம்.

(பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

**நகல்:**

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/x/2023

பிரிவு அலுவலர்